





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## டிசம்பர் - 12.12.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- விளையாட்டு செய்திகள்










## தமிழக நிகழ்வுகள்

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழக உள்ளாட்சி தேர்தலை நடத்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
    - 2011 கணக்கெடுப்பின்படி பதவிகளுக்கான சுழற்சி, இடஒதுக்கீடு இரண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ளது.
    - 9 மாவட்டங்களை தவிர்த்து பிற கிராமப்புற உள்ளாட்சிகளுக்கு டிசம்பர் 27, 30 ஆகிய தேதிகளில் தேர்தல் நடைபெற உள்ளது.
    - **செய்தி துளிகள் :**
        - அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியலமைப்பு விதி 40 குறிப்பிடுகிறது.
        - **தன்னிறைவு பெற்ற கிராம சுயராஜ்ஜியம் வேண்டும் என வலியுறுத்தியவர் மகாத்மா காந்தியடிகள்** ஆவார்.
        - அக்டோபர் 02, 1959 பண்டித ஜவஹர்லால் நேரு ராஜஸ்தான் மாநிலம் நகவூரில் பஞ்சாயத்து ராஜ்-க்கான அடிக்கல்லை நாட்டினார்.

## தேசிய நிகழ்வுகள்

- **நுழைவு அனுமதி படிவம்** (இன்னர் லைன் பெர்மிட்) **மணிப்பூருக்கும் நீட்டிக்க குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் ஒப்புதல்** அளித்துள்ளார்.

- இந்த வசதியை பெற்றுள்ள மாநிலங்களுக்கு மற்ற மாநிலத்தவர்கள் செல்லும்போது முறையான அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.
- மேலும், அந்த மாநிலங்களில் வசிக்கும் மக்களுக்கு அவர்களது நிலம், வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட விவரங்களில் சிறப்பு அந்தஸ்து வழங்கப்படும்.
- **செய்தி துளிகள் :**
  - அருணாச்சல பிரதேசம், நாகலாந்து, மிஸோரம் ஆகிய மாநிலங்களுக்கு நுழைவு அனுமதிப் படிவம் வசதி வழங்கப்பட்டுள்ளது.
  - கடந்த 1873 – ஆம் ஆண்டு முதல் நுழைவு அனுமதிப படிவம் வசதி நடைமுறையில் உள்ளது.
  - அரசமைப்பு சட்டத்தின் 6-ஆவது அட்டவணையின் கீழ் பாதுகாக்கப்படும் மாநிலங்கள் மற்றும் நுழைவு அனுமதிப் படிவத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டு வரும் மாநிலங்களுக்கு குடியுரிமை சட்ட திருத்த மசோதாவில் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

We Shine Academy™

## சர்வதேச நிகழ்வுகள்

- **ரஷிய வெளியுறவுத் துறை அமைச்சர் செர்கெய் லாவ்ரோவ்,** அதிபர் மாளிகையில் டொனால்ட் டிரம்ப்பை சந்தித்துப் பேசினார்.
  - அப்போது, உக்ரைன் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று லாவ்ரோவிடம் டிரம்ப் வலியுறுத்தினார்.

- மேலும், அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் அமெரிக்க அதிபர் தேர்தலில் தலையிடுவதற்காக ரஷியா எந்த விதமான முயற்சிகளையும் மேற்கொள்ளக் கூடாது என்று டிரம்ப் எச்சரித்தார்.
- **செய்தி துளிகள் :**
  - ஊலகம் தழுவிய ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு ஆதரவு தெரிவிப்பதாக லாவ்ரோவிடம் தெரிவித்த டிரம்ப், அத்தகைய ஒப்பந்தத்தில் அமெரிக்காவையும், ரஷியாவையும் தவிர, சீனாவும் கையெழுத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார்.
  - ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதைத் தடுப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ரஷியா ஆதரவு தர வேண்டும் என்று டிரம்ப் கேட்டுக் கொண்டார்

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **பி.எஸ்.எல்.வி – சி48 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.**
  - புவி கண்காணிப்பு மற்றும் ராணுவப் பாதுகாப்புக்கு உதவும் இஸ்ரோவின் ரிசாட் - 2பி ஆர் 1 செயற்கைக்கோள் உள்பட 10 செயற்கை கோள்கள் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன.
  - ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சத்தீஸ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ராக்கெட் ஏவப்பட்டது.
  - **செய்தி துளிகள் :**

- இஸ்ரோவின் மிகுந்த நம்பகத்தன்மை கொண்ட விண் வாகனமாகத் திகழ்ந்து வரும் பி.எஸ்.எல்.வி ராக்கெட் 50வது முறையாக விண்ணில் ஏவப்பட்டது.
- பி.எஸ்.எல்.வி ராக்கெட் 26 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது.
- பி.எஸ்.எல்.வி ராக்கெட் 1.9டன் எடை கொண்ட செயற்கைக்கோளை தாங்கி செல்லும் திறன் கொண்டது.

## விளையாட்டு செய்திகள்

- **சர்வதேச கூடைப்பந்து நடுவராக தஞ்சாவூரைச் சேர்ந்த துரைராஜ் ரமேஷ்குமார் தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
    - இவர் சர்வதேச கூடைப்பந்து போட்டிகளுக்கு நடுவராக 2021 வரை பணியாற்ற முடியும்.
    - 10வது ஆசிய விளையாட்டுப்போட்டியில் நடுவராக பணியாற்றினார். இதன் மூலம் ஆசிய விளையாட்டில் இந்தியாவில் இருந்து 28 ஆண்டுகளுக்கு பிறகு இறுதிப்போட்டிக்கு நடுவராக பணியாற்றினார்.

## திருக்குறள்

**குறள் எண் : 45**

அதிகாரம் : இல்வாழ்க்கை

குறள் இயல் : இல்லறவியல்

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

We Shine Academy TM

**பண்பும் பயனும் அது.**

**விளக்கம் :** ஒருவனது குடும்ப வாழ்க்கையில் கணவன் மனைவியர்க்கு இடையே அன்பும் அறம் செய்யும் குணமும் இருக்குமானால், அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

We Shine Academy™